சிவமயம்

சென்னை, திருவேட்டீசுவரன்பேட்டை
திருக்கோயிலின்கணெழுந்தருளியிருக்கும்

# ஸ்ரீ ஆறுமுகசுவாமி
# தோத்திரம்

இது பார்க்காவடி
**அண்ணாமலை பரதேசியவர்கள்**
வேண்டுகோளால்,
சென்னை, ஆறுகாடு, குயப்பேட்டை
தமிழ்ப்புலவர்
**நெல்லை-அப்பாசாமி உடையாரவர்கள்**
இயற்றியது.

மறு பதிப்பு 1971

முதற் பதிப்பு—1910

இதன் விற்பனைத் தொகை திருவேட்டீசுவரர் ஆலயத் திருப்பணி நிதிக்கு அளிக்கப்பெறும்.

சித்திரா பௌர்ணமி
1971

விலை : 10 காசு

கபீர் அச்சகம், சென்னை–5

## சிறப்புக்கவி

---

ஸ்ரீமத்-வித்வான்

### ம. இராஜகோபாலப் பிள்ளையவர்கள்

*இயற்றிய*

**நேரிசைவெண்பா**

திருப்பேற்றை நாடியொரு தோத்திரநூற் செய்தான்
விருப்பேற்று நல்லதிரு வேட்டீச் சுரப்பேட்டை
ஆறுமுக மாநிமலற் கப்பாசா மிப்புலவ
ரேறுமுக மாநெல்லி யான்.

ஸ்ரீமத்-வித்வான்

### ஆ. மே. சென்னகேசவலு நாயுடவர்கள்

*இயற்றிய*

**அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்**

திருத்தமுறச் சேதனர்க டிருவேட்டீச் சுரப்
பேட்டை சேர்ந்து மிக்கோர், நிருத்தமுற வாழாறு
முகநிமல னெடுங்கழற்கே நிகரின்றெல்லாப்,
பொருத்தமுறத் தோத்திரமா நூலொன்று புரிந்தீந்
தான் புலவரேறு, மொருத்தனுறு வளநெல்லி
யப்பாசா மிப்பெயர்கொ ளுடையான் மாதோ.

---



சிவமயம்

வேலுமயிலுந்துணை

## திருவேட்டீசுவரன்பேட்டை
## திருக்கோயிலின்கணெழுந்தருளியிருக்கும்

# ஆறுமுகசுவாமி தோத்திரம்

### காப்பு வெண்பா

ஏறுமுகந் தேறு மெழிறிருவேட் டீச்சுரம்வா
ழாறுமுகன் பாதத் தணிபாவான்—மாறிலக
நேசமுறப் போற்றவில்வ நீழலமர் வல்லபக
ணேசநின்றுட் கூட்ட நினைப்பு.

## நூல

### பதினான்குசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

சீராரு மணிமகுட நிறைசிரம் பொன்னோடை
திருநீற்று நுதலி னுசி
சேர்கருணை யீராறு விழிகுண்ட லச்செவி
சிவசிவா வென்புன் னகைவாக்
கேராறு முகமணிக் கந்தர்நவ ரத்னார
விழைமுந்நூன் மார்ப மீரா
றெறிகொடிச் சேவலா திப்படைச்செவ் வேலேந்து
மினைவலையங் கடக நீபத்
தாராறு திண்ணியதோ ளால்வயிறு கோசிகந்
தரியிடை சதங்கை கொஞ்சுஞ்
சலசதிரு வடியசுர தந்திகுற மாதுபயஞ்
சாருநவ வீரர் சூழச்
சூராறு நடனமயின் மீதுவந் தருளுவாய்
தொல்திருவேட் டீச்சுர மமர்
சுரவாறு முகநாம மறையாறு சுகசேம
துரையாறு முக சுவாமியே. (1)

மதியாத வன்கனற் கட்சோதி யமரர்துயர்
மாற்றவரு ணுதல் விழிதர
வருமறு பொறிச்சுடர்க் காய்ந்துல கெலாந்தொழவு
மாதேவ ரருடீ வளி

மதியாத வக்கங்கை தனிலிடவு மப்புனன்
 மச்சமுறை புற் பொய்கையின்
மான்முன்வரர் காப்பவெழு செங்கிரணம் வீசாறு
 மகவையறு மீன் வளர்ப்ப
வுதியாத வன்னந்தி மீதுமா தேவனே
 டுவந்தொன் றதாவ ணைப்ப
வோராறு கமலமுக மீராறு செங்கரத்
 தொருருப முற வழைக்குந்
துதியாத வாசரவ ணபவகாங் கேயவருள்
 தொல்சண்ப காடவி யமர்
சுரவாறு மகநாம மறையாறு சுகசேம
 துரையாறு முக சுவாமியே. (2)

பதிநுதற் றிக்கஞ்சி யோடம்மை நூபுரம்
 பட்டுதிரு மொன்பான் மணிப்
பாவையர்க ளீன்றநவ வீரர்லக் கங்குமரர்
 பரவப்பொன் மேரு விற்போ
யதிவிதம தாவதிர வாடவட ரூழியென
 வசுரர்க் கொளிக்கு மிந்திர
ஞதிசிதி சாபால ரார்த்துத்தம் படைவீசு
 மவரவர்க் கத்திர மேவி
கொதியதட் டறசெருப் படிவீழ மகதிமுன்
 கூறவருள் கூர்ந் தெழுப்பிக்

கொண்டசரு வஞ்ஞமெய்ச் சித்ரூபங் காட்டியருள்
குமரகுரு பரவன்பர் சொற்
றுதியுறவு சுப்பிரமண் ணியவெளிய சொற்குமருள்
தூயசந் தனவனம் வாழ்
சுரவாறு மகநாம மறையாறு சுகசேம
துரையாறு முக சுவாமியே.

வன்னமலி பைந்துழா யையாயு தங்கடிரு
மறுமணவே யார மணிபால்
வாரிபீ தாம்பர வநந்தசா யியினுந்தி
மலரின்வரு புவன சிட்டி
யன்னமலி வெண்சலச மனைமறைச் செல்விநா
வமரர்ஞான வந்த ணமக
னறியாமை யாற்கலுழ்ந் தெண்கணிலு நீர்வார
வணிமுடித் தலைக் குட்டிவண்
மன்னுமலி சிறையிட்டவ் விதிசெய்து வேதமுறை
வாக்கியற் றுதை செவியின்
மனமகிழ்ந் துள்ளுளெழு மோகையா நந்தவுரை
மந்தணவின் மழலை மொழியாற்
சொன்னவோ மடசரச் சுகசொரூப மடியற்குஞ்
சொல்வையே திருப்புரம் வாழ்
சுரவாறு மகநாம மறையாறு சுகசேம
துரையாறு முக சுவாமியே. (4)

விந்தகிரி வாதாவி வில்வலனுட நகுடன்
வீழ்த்திமாற் சிவ மாக்கியே
விரைகமண் டலநீர்க் கவிழ்த்தகா ரண்டவுரு
விக்னரா சர்ப்ப ணிந்த
சந்தமலி வந்துகமழ் விரியுவரி யாசமன
சர்வகலை ஞான கற்புத்
தனவுலோ பாமுத்திரை மனைவாழ்க்கை மகிழ்முனிவர்
தலைவன்மலை யத்து வசன்
சிந்தையிரு ளறநுமடி பணியவீ ராறியற்
றிருந்துசிவ தரு மோத்திரஞ்
செவிகுளிர வோதுசிவ சுப்பிரமண் ணியதேவ
தேசிகோத் தம சண்முக
சுந்தரவுமை குமரமான் மருகமுரு காவருள்
தொன்மைசண் பகவனம் வாழ்
சுரவாறு மகநாம மறையாறு சுகசேம
துரையாறு முக சுவாமியே. (5)

மன்னுந்தொல் காப்பியத் தமிழ்மறை தெளிந்துமதின்
மதிதடவு மாட நீடி
வாழ்மதுரை மீனுட்சி சுந்தரே சர்ப்பனுவன்
மகிழ்சடைச் சங்க மமர்நா
டன்னுளொரு நெறிவெற்றி வில்லெறுழி வனசரர்த்
தலைவனுய்ச் சூழ்ந்தெ னதுபேர்

சாற்றுமுட் டையெனப் போன்போலு மென்றேதத்
    தாழ்த்திதான் விழுந்த துளியென்
றுன்னும் மகப்பொருளின் வன்மைபொய் யாவென
    வோதிதவ முணர்விஞ் ஞான
வுருவி னருளாளுக்கி வேலாயு தாதேசி
    கோத்தம வெனப்ப ணிந்த
துன்னுமதி புலமைபொய் யாமொழிக் கருள்காட்சி
    தோன்றுமே சந்தன வனம்வாழ்
சுரவாறு மகநாம மறையாறு சுகசேம
    துரையாறு முக சுவாமியே. (6)

செந்நிறப பொறியகச் சிறைமொய்தா திகழ்நெக்க
    சிதறிரு வுடைவ சொரிபைந்
தேறலுண் களிதோமி லின்னிசைப் பணமழலை
    தேருஞ்சா தாரி பாடற்
றந்நிறந்தெளி யாதெவ் வெவருஞ்சுர மயமாகத்
    தாவி மூவுலகுங் கமழ்
தண்சுகந் தத்தொடையன் மூசும்வல் லிசைப்புள்ளெதிர்
    தரவழியு மகதி சூட்டி
யெந்நிறந் தெளிகைலை வேதகண்டன் செவியி
    லிசைமதுபெய் புண்ணிய மேலா
யிடரூழி யுருவெடுத் தென்னவெவை யும்மடர்த்
    தெதிரவுணர் முனி நாரதன்

துந்நிற மகத்துதிவெந் தகரேறி வருகாட்சி
தொழுவனே திருப்புரம் வாழ்
சுரவாறு மகநாம மறையாறு சுகசேம
துரையாறு முக சுவாமியே. (7)

துற்றுபொழி லிமயத் தடஞ்சாரருரு வுமொரு
துருமத் தடாகத் திடை
தொல்லால வாய்க்கடைச் சங்கத்தி லாதியுரை
தொடர்கபிலே லெழுவர்த் தலை
பெற்ற நக்கீரர்சிவ சிந்தைகவர் விரகினுற்
பெரிது வந்தெடுத் தாயிரம்
பேராக்கி நியதியினி னீர்த்துறைச் செலநின்ற
பேரிடர் படுத்தவு முணர்
வுற்றுமுரு காற்றுப்படை யன்பி ஞேதிடவு
மொளிருசுடர் வடிவேல் விடுத்
துயர்மலை பிளந்திவுளி முகிதுளைத் தெவருமுய
வோதிபணி பவர் கவலைதீர்
சுற்றுமயின் மிசையுபய வனமாதர் பயின்முருக
தூயவருள் செல்வி புரம்வாழ்
சுரவாறு மகநாம மறையாறு சுகசேம
துரையாறு முக சுவாமியே. (8)

வம்புதன வரசவசு ரேந்திரன் மகள்கூடி
வாழ்ந்துகா சிப முனிவனுன்

மந்த்ரி யருடவத்தாயு ளண்டவர சாதிதர
வான்ெ◌றுழம யேந்தி ரத்திற்
றெம்புமனே மக்கடுணே யவர்தங்கை யுடனரசி
செயத்தருதுன் மாயை புத்ரன் [பல
செருமலேதம் பியர்தனேயர் தனியாண்மை கொடுமை
சேனேபடை யாவு முற்றி
வெம்புகொடு வாள்வீர சூரபத்மன் னெதிர
விமலமெய்க் காட்ட வேத்தி
வெகுண்டடர வலேயின்மா வாகவீட் டிருகூறு
வெண்கோழித் துவச மாவிண்
தும்புகெட மயிலேறி வெற்றிவேல் கைக்கொண்ட
சோதியருள் சந்தன வனம்வாழ்
சுரவாறு மகநாம மறையாறு சுகசேம
துரையாறு முக சுவாமியே. (9)

கந்தமலி தருநிழற் றேனுவெண் களிறுபரி
கமலம்வளே மணிசுரர் நிரை
கற்பரம் பயர்சூழ சிவிகையெழு முனிவர்பொற
கதலியுரு மெதிர் வச்சிர
விந்தைமலி படையேந்தி மூவுலகுங் குடைகவிய
விட்சு தர்மையின் மாலேதாழ்
வீரபுய நிறைசசி சுகத்தவரி யணேவீற்ற
மேகமூர் தேவ ராயன்

சந்தமலி யெழுநிறப் பொன்பூத்த மின்கொடிச்
சர்வபூ டண கனதனத்
தனதேவ குஞ்சரியைத் தாரைநீ ராற்றரத்
தணல்வேள்வி முன் மணந்துச்
சொந்தமலி வெள்ளானை மேற்றிரு மணக்கோலந்
தொழவருள் செல்விபுரம் வாழ்
சுரவாறு மகநாம மறையாறு சுகசேம
துரையாறு முக சுவாமியே. (10)

மன்னுமலை வாரமேற் பாடிவன வேடர்பதி
வல்லாண்மை வேனம்பி செய்
மாதவச் சிவமுனிவ னருளின்பிணை யீன்றுசெல
மகண்மனை களிப்ப வளர்நாள்
பொன்னுமோ வெழிலெனப் பைந்தினையி தண்வைகிப்
புட்கடிபூம் பாவை யென்றே
போந்துதேன் பிண்டியுண் டெந்தைமுன் வேங்கையாய்ப்
போனந தாகந் தீர்த்தா
யென்னுண்மோ கமுந்தீர்ப்பை யென்னலேன் மூத்தகிழ
மெனவேக வரு மைங்கர
னெதிர்க்கமா தங்கமே யென்றோடி வந்தணைய
வினமகிழ வனன்முன் வேட்டுத்
துன்னுகுற வள்ளியம் மையுடன் வருவையருள்
தொல்திருவேட் டீச்சுரம் வாழ்

சுரவாறு மகநாம மறையாறு சுகசேம
துரையாறு முக சுவாமியே. (11)

சென்மநிலை தளராதெந் நாளுநின திருவடியுந்
தேவிமா ரிருவர் பதமுஞ்
சேவித்துத் துதிதிருப் புகழ்வண்ண சந்தமுறத்
திரமாய்ப் படிக்கக் கேட்க
மின்மைகேட வொளிருசெவ் வான்மேனி யிளவுரு
விளங்கெழிற் பசுங் கலபமேல்
வீற்றதிரு வருட்கோலங் காணத்திரு நாமங்கள்
மெய்ப்புளக மெழ வழுத்த
வன்மைகெட் டுள்ளுருகி நெக்கவா நந்தமது
வழியுபா மாலை பாட
வானுளோா பணியா லயத்துப் புரண்டுடல்
வலம்வரத் தொன்று தொட்டுத்
தொன்மைவிட வரியமா பதகற்கு மிதுவருமோ
தூய்சண்ப காடவியின் வாழ்
சுரவாறு மகநாம மறையாறு சுகசேம
துரையாறு முக சுவாமியே. (12)

வானவர்க டனவமுதுங் கானவர்கள் மனமதுவும்
மாமவல மாக வெற்றி
வடிவேல் சுரப்படைகள் சேவலங் கொடியேந்தி
மயிலேறி நவ வீரர்கண்

மானலக்கங் குமரர் சூழவிந் திரன்மனைவி
வரவரம் பையர் பணிந்து
வாழ்த்துமுரு காசரணங் கார்த்திகே யாசரண
மலைமாது மைந்த சரணந்
தானவர்கள் காலசர ணம்விசா காசரணந்
தந்திமுகற் கிளைய சரணஞ்
சரவணோற் பவசரணங் குமரகுரு பரசரணந்
தாசரதி மருக சரணம்
ஆனவர முதவுசிவ சுப்பிரமண் ணியசரண
மன்பறிவி லென் றுதிக்கு
மருடிருவேட் டசுரத் தாறுமுக சுவாமிநின
தணியதிரு வடிகள் சரணமே. (13)

ஆறுமணி முடிவாழி யாறிரருள் விழிவாழி
யாறிரணி செவிகள் வாழி
யாறிரு கடம்பணிதோள் பன்னிரைத் திரகைக
ளணிமுந்நூன் மார்பம் வாழி
வீறுமுடை யிடைவாழி மென்றிருவ டிகள்வாழி
மேவுமிரு மாதர் வாழி
வெற்றிவேன் மயில்வாழி வெண்சேவற் கொடிவாழி
விசயநவ வீரர் வாழி
கூறிலக்கங் குமரர் வாழிபூ தர்கள்வாழி
கொள்தகர் மனத்தேர் வாழி

குலவுமா றக்கரமோ டாறுகுன் றுகள்வாழி
    கூட்டன்பர் வாழி யணியு
நீறுமணி வாழிதிரு வேட்டீச நாதனிட
    நிறைசண்ப கக்கொ டியரு
ணோரைங் கரற்கிளைய வாறுமுக சுவாமியே
    நீடூழி வாழி வாழி. (14)

**வேலுமயிலுந்துணை.**

---

## அருள் பெறும் வழி

வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
கந்தனென்று சொல்லக் கலங்குமே ; செந்திநகர்ச்
சேவகா ! என்று திருநீ(று) அணிவார்க்கு
மேவவா ராதே வினை. —பழைய பாடல்

## வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க ;
அறுமுகம் வாழ்க ; வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க ;
குக்குடம் வாழ்க ; செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க ;
யானைதன் அணங்கு வாழ்க ;
மாறிலா வள்ளி வாழ்க ;
வாழ்கசீர் அடியார் எல்லாம்.

—கந்தபுராணம்

---

## வேண்டுகோள்

விரோதிகிருது ஆண்டு சித்திரைத் திருவிழா வைத் தொடர்ந்து திருவேட்டீசுவரர் ஆலயத்தில் திருப்பணி வேலைகள் தொடங்கவுள்ளன.

அன்பர்கள் தம் காணிக்கைகளை விரைவில் தேவஸ்தானத்திற் சேர்ப்பிக்கவும்.